*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 64/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-2)***

*Name / Father's Name:* ***திரு.ஐயப்பன் த/பெ. நல்லசெல்லி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **17.06.2025.**

துவக்க நேரம் 01.42 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் இல்லை என்றாலும் போலீஸ் பொறுப்பதிகாரியான திரு.ராமசாமி அவர்கள் ஆஜராகியுள்ளார். அவர் முன்னிலையில் சாட்சி அடையாளம் காட்டப்பட்டு விசாரணை**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது தகரப்புதுாரில் உள்ள மூலப்புதுாரில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 10.05.2022 அன்று மாலை 04.00 மணிக்குமேல் எங்க வீட்டில் கலாம் முலாம் என்று சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தபொழுது, எனது மனைவி விஜயாவை, எதிரிகள் லோகநாதன் மற்றும் சித்ரா ஆகியோர் அடித்துக்கொண்டிருந்தார்கள்.

2) நான் சென்று ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, எதிரி லோகநாதன் எனது நெஞ்சில், எட்டி உதைத்து என்னை கீழே தள்ளி, எனது நெஞ்சில் குத்தி, எனது இடதுகை நடுவிரலை பிடித்து ஒடித்துவிட்டார். எனது மனைவியை அடித்து, அவரது நெஞ்சில் உதைத்ததில் அவருக்கு மயக்கம் வந்து விழுந்துவிட்டார், அவரது பல்லில், எதிரிகள் குத்தியதில் அவருக்கு உதடு கிழிந்து வாய் முழுவதும் இரத்தம் வந்துகொண்டிருந்தது.

3) நானும், எனது மனைவியும் ஆத்துார் அரசு மருத்துவமனைக்கு வந்துகொண்டிருந்தபொழுது, எனக்கும் மயக்கம் வந்ததால், அந்த வழியாக வந்த

எங்களுக்கு தெரிந்த பையனை, எங்களது வாகனத்தை ஓட்டச்சொல்லி அடிபட்ட நாங்கள் இருவரும் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்து சேர்ந்தோம். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 01.48 A.N

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.17 14:27:24 +0530

Judicial Magistrate No.2, Attur.